**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No.244/2025 | Date | : | 15.06.2026 |
| Deposition of Witness for | : | அ.சா.1 | Taluk | : | |
| Name | : | ராஜகுமார் | Calling | : | |
| Father Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 15.06.2026

( எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். ).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஈரோடு குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வுத்துறையில் காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 18.06.2024–ம் தேதி 15.30 மணிக்கு ஈரோடு அலகு குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆகிய தங்களுக்கு உதவியாக நானும் தலைமைக்காவலர் 1420 திரு.வாசுதேவன் என்பவரும் உத்திரவுப்படி தங்களுடன் சேர்ந்து ஈரோடு மாவட்டத்தில் இருந்து வெளிமாநிலங்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் கடத்துதல், பதுக்குதல் மற்றும் கள்ள சந்தையில் விற்பனை செய்தல் போன்ற குற்றங்களை தடுக்கும் பொருட்டு தகவலின் பேரில் ஈரோடு தாலூக்கா PS Limit மூலப்பாளையம் பெட்ரோல் பங்க் அருகில் கண்காணித்துக் கொண்டிருந்த போது அந்த இடத்தில் சந்தேகப்படும் படி ஒரு நபர் 03 மூட்டையின் அருகில் நின்று கொண்டிருந்தார்.

2. பின்னர் சந்தேகத்தின் பேரில் போலீஸ் பார்ட்டியாகிய நாங்கள் அவர்அருகில் சென்ற போது போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் அந்த நபர் 03 மூட்டைகளையும் அந்த இடத்திலேயே விட்டு விட்டு தப்பித்து சென்றுவிட்டார். தப்பித்து சென்ற நபரைப்பற்றி விசாரித்த போது அவர் பெயர் மற்றும் விலாசம் காஜாமைதீன், த/பெ முகம்மதுஇக்பால், 111-பூம்புகார்நகர், P.B.அக்ரஹாரம், ஈரோடு என்று தெரியவந்தது. அந்த இடத்தில் இருந்த 3 மூட்டைகளையும் சோதனை செய்து பார்த்த போது அவற்றில் தலா சுமார் 55 கிலோ வீதம் மொத்தம் சுமார் 165 கிலோ தமிழக அரசால் இலவசமாக வழங்கப்படும் பொதுவிநியோக திட்ட அரிசி இருந்தது. தப்பிஓடிய நபர் காஜாமைதீன் என்பவர் எவ்வித ஆவணங்கள் மற்றும் உரிமம் எதுவும் இல்லாமல் வைத்திருந்த தலா சுமார் 55 கிலோ எடையளவு கொண்ட 3 மூட்டைகளில் இருந்த மொத்தம் சுமார் 165 கிலோ தமிழக அரசால் இலவசமாக வழங்கப்படும் பொது விநியோக திட்ட அரிசியை கைப்பற்ற பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் உடன் இருந்த நானும் தலைமைக்காவலர் 1420 திரு.வாசுதேவன் என்பவரையும் சாட்சிகளாக வைத்து எங்கள் முன்னிலையில் 18.06.2024-ம் தேதி 16.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார்.

3. கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் (**கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). முதலாவது சாட்சி கையொப்பம் தலைமைக்ககாவலர் 1420 திரு. வாசுதேவன் என்பவரது ஆகும். கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 18.06.2024-ம் தேதி 16.30 மணிக்கு நிலையம் வந்து தலைமறைவு எதிரி காஜாமைதீன் என்பவர் மீது நிலைய குற்ற எண் : 169/2024 u/s 6(4) Of TNSC(RDCS) Order 1982 r/w 7(1)a(ii) Of EC Act 1955 ன் படி வழக்கு பதிவு செய்தார். வழக்கு சம்மந்தமாக சிறப்பு உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

**சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை, எனவே எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.**

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.06.15 17:03:08 +0530

Judicial Magistrate No.III,

Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No.244/2025 | Date | : | 15.06.2026 |
| Deposition of Witness for | : | **அ.சா**.2 | Taluk | : | |
| Name | : | **மூர்த்தி** | Calling | : | |
| Father Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 15.06.2026

(**சாட்சி காணொலி மூலம் சாட்சியம் அளிக்கிறார்**)

( எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். ).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது சேலம் மாவட்டம் தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுதுறையில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஈரோடு குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 18.06.2024–ம் தேதி 15.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் கணேசன் உத்திரவுப்படி ஈரோடு மாவட்டத்தில் இருந்து வெளிமாநிலங்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் கடத்துதல், பதுக்குதல் மற்றும் கள்ள சந்தையில் விற்பனை செய்தல் போன்ற குற்றங்களை தடுக்கும் பொருட்டு தலைமைக்காவலர் 1420 திரு.வாசுதேவன் மற்றும் காவலர் 587 திரு.ராஜ்குமார் ஆகியோர்களுடன் தகவலின் பேரில் ஈரோடு தாலூக்கா PS Limit மூலப்பாளையம் பெட்ரோல் பங்க் அருகில் கண்காணித்துக் கொண்டிருந்த போது அந்த இடத்தில் சந்தேகப்படும் படி ஒரு நபர் 3 மூட்டையின் அருகில் நின்று கொண்டிருந்தார்.

2. பின்னர் சந்தேகத்தின் பேரில் போலீஸ் பார்ட்டியாகிய நாங்கள் அவர்அருகில் சென்ற போது போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் அந்த நபர் 3 மூட்டைகளையும் அந்த இடத்திலேயே விட்டு விட்டு தப்பித்து சென்றுவிட்டார். தப்பித்து சென்ற நபரைப்பற்றி விசாரித்த போது அவர் பெயர் மற்றும் விலாசம் காஜாமைதீன், த/பெ முகம்மதுஇக்பால், 111-பூம்புகார்நகர், P.B.அக்ரஹாரம், ஈரோடு என்று தெரியவந்தது. அந்த இடத்தில் இருந்த 3 மூட்டைகளையும் சோதனை செய்து பார்த்த போது அவற்றில் தலா சுமார் 55 கிலோ வீதம் மொத்தம் சுமார் 165 கிலோ தமிழக அரசால் இலவசமாக வழங்கப்படும் பொதுவிநியோக திட்ட அரிசி இருந்தது.

3. பின்னர் தப்பி ஓடிய நபர் காஜாமைதீன் என்பவர் எவ்வித ஆவணங்கள் மற்றும் உரிமம் எதுவும் இல்லாமல் வைத்திருந்த தலா சுமார் 55 கிலோ எடையளவு கொண்ட 3 மூட்டைகளில் இருந்த மொத்தம் சுமார் 165 கிலோ தமிழக அரசால் இலவசமாக வழங்கப்படும் பொது விநியோக திட்ட அரிசியை கைப்பற்ற பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் உடன் இருந்த போலீஸ் சாட்சிகளான 1) தலைமைக்காவலர் 1420 திரு.வாசுதேவன் 2) காவலர் 587 திரு.ராஜ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் 18.06.2024-ம் தேதி 16.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். **(கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 18.06.2024-ம் தேதி 16.30 மணிக்கு நிலையம் வந்து தலைமறைவு எதிரி காஜாமைதீன் என்பவர் மீது நிலைய குற்ற எண் : 169/2024 u/s 6(4) Of TNSC(RDCS) Order 1982 r/w 7(1)a(ii) Of EC Act 1955 ன் படி வழக்கு பதிவு செய்தார். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கைப்பற்றப்பட்ட பொ.வி.திட்ட அரிசியை த.நா.நு.பொ.வா.கழக கிடங்கில் ஒப்புவித்து அத்தாட்சி பெற்றார். **(அத்தாட்சி அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்பு இவ்வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சிறப்பு உதவி ஆய்வாளர் கணேசன் அவர்களை 02.07.2024 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். பகுப்பாய்வு செய்து தரசான்றிதழ் வழங்கிய திரு. அமல்ராஜ் தர ஆய்வாளர் திரு. தமிழ்செல்வன் துணை மேலாளர் தரக்கட்டுப்பாடு ஆகியோர் வழங்கிய தரச்சான்றிதழ் பெற்றேன். **(தரச்சான்று அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தரச்சான்றிதழ் வழங்கிய திரு. அமல்ராஜ் மற்றும் திரு. தமிழ்செல்வன் ஆகியோர்களை 02.07.2024 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். வழக்கு புலண்விசாரணை முடித்து 20.07.2024 ம் தேதி ஈரோடு குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை குற்ற எண் 169/2024 ச/பி 6(4) of TNSC (RDCS) order 1982, r/w 7(1)a(ii) of EC Act 1955 எதிரி காஜாமைதீன் என்பவர் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை, எனவே எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.06.15 17:03:17 +0530

Judicial Magistrate No.III,

Erode.